

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 12 Pages 4 Sunday, 11 May 2008 Free Copy

விவசாயிகளை பாதித்த மழை வெள்ளம்

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது, ஜின்னா நகரம். இவ் நகரமானது மூதூர் பிரதேச பிரிவிற்கு உட்பட்டுள்ளது. இந்நகரத்தில் சுமார் 1800 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களது ஜீவனோபாயமாக விவசாயம் காணப்படுகின்றது. அண்மையில் நாடு பூராகவும் பெய்த கடும்மழை காரணமாக பல பாகங்களில் விவசாயிகள் பாதிப்புற்றனர். அவ்வாறு பாதிப்புற்ற விவசாயிகளில் ஜின்னா நகர விவசாயிகளும் உள்ளடங்குகின்றனர். இவ் அடை மழை காரணமாக தமது முதலீட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், வருமானமின்றி தவிப்பதாக சொகுத் அலி மருதுப் தெரிவித்தார். ஒரு மூடை நெல்லை விற்கும் போது இரண்டாயிரம் ரூபா இலாபம் வழக்கமாக கிடைக்கும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஆயிரம் ரூபா கிடைப்பதே அரிதாக உள்ளது என தெரிவித்தார். நெல் உற்பத்தி செலவை சமாளிப்பதே கஷ்டமாக இருப்பதாக அவர் தெரிவித்தார். வழக்கமாக விவசாயிகள் கடன்களை பெறுவதும் தமது சொத்துக்களை அடகு வைத்தும் அல்லது விற்றும் விவசாயத்தை மேற்கொள்வது வழக்கம். அவ்வாறே ஜின்னா நகர விவசாயிகளும் கடன் பெற்று தற்போது திண்டாடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



ஜின்னா நகர் விவசாயிகள்

பணம் வழங்கியவர்களும், வங்கிகளும் பணத்தை கேட்டு வரும் போது தாம் செலுத்த இயலாமல் மனம் வேதனைப்படுவதும், அவர்களிடமிருந்து தப்பிக்க தற்கொலை செய்ய மனம் தூண்டப்படுவதாகவும் தெரிவிக்கிறார் சவுத் அலி, இவர் ஒரு இலட்சம் ரூபா கடன் பெற்று விவசாயத்தை மேற்கொண்டதாகவும் அறுவடை காலத்தில் பயிர்கள் அழிவடைந்து சென்றதால் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் மனம் கொந்தளிப்பதாகவும், தற்கொலை மேற்கொண்டால் குடும்ப அங்கத்தினர்கள் நடு வீதிக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டு விடும் என்று தெரிவித்தார். தான் ஆறு தடவை இடம் பெயர்ந்ததாகவும், சுமார் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா நட்டம் அடைந்துள்ளதாகவும் குறிபிட்டுள்ளார்.

பொருளாதார உற்பத்தி செய்து கொண்டு வருகையில் வாழ்வாதாரம் உயரும் பொழுது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அடிமட்டத்திற்கு சென்று மீண்டும் எமது இயல்புக்கு ஏற்ப வாழ்க்கையை மீள் ஆரம்பிக்கும் போது பிரச்சினைகளும் தோன்றுகின்றன. அவ்வாறு முயற்சி செய்து வாழ்க்கை நிலையை சுமூகமான நிலைக்கு உயர்த்தும் போது மழையினால் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழையினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய எவருமே உதவ முன்வரவில்லை. உரம் மட்டுமே உதவியாக வழங்கப்பட்டது. நெல் அறுவடை பாதிப்படைந்ததால் அதோடு நேரடியாக சம்பந்தப்பட்ட வர்த்தகங்களும் பாதிப்புற்றுள்ளன. நெல் உற்பத்தி பாதிப்படைந்ததால் ஆலை உரிமையாளர்களும் பாதிப்புற்றனர். நெல் அதிகம் விளையும் போது அதனை குத்தி அரிசியாக வழங்கும் போது வருமானம் கிடைக்கும். நெல் இடித்தல், மாவு அரைத்தல், கொச்சிக்காயை இடித்தல் ஆகியவற்றின் தேவை குறைந்து போய் விட்டது.

பணம் வழங்கியவர்களும், வங்கிகளும் பணத்தை கேட்டு வரும் போது தாம் செலுத்த இயலாமல் மனம் வேதனைப்படுவதும், அவர்களிடமிருந்து தப்பிக்க தற்கொலை செய்ய மனம் தூண்டப்படுவதாகவும் தெரிவிக்கிறார்

நெல் உற்பத்தியின் பாதிப்பு நாடு பூராகவும் உணரப்பட்டுள்ளது. விவசாயிகள் மட்டுமின்றி நுகர்வோரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். வளமான நாட்டை உருவாக்குவதில் விவசாயிகளின் பங்கு அளப்பரியது. அத்தகைய செயற்பாட்டிற்கு அனைவரும் முன்னிற்று உழைக்க வேண்டும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிந்திய தகவல் உங்கள்

நீதிகோரி தாண்ணங்களையும் உங்கள்

பகுபடப்புக்களையும் கலைஞர் வாழ்வி

அனுப்பவும்கள். அமைதியை

மீண்டும் வாழ்வோம்

பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு

தொ.பே: 0774952242

மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 123ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 71,011குடும்பங்களைச் சேர்ந்த 256,944 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு கணேசபுரத்தில் மற்றுமொரு இடம்பெயர் முகாம் ஒன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மன்னார் அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய 530 குடும்பங்களை சேர்ந்த 2085 பேர் இந்த முகாமில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

முசலி, மாந்தை மேற்கு நானாட்டான், மடு ஆகிய பிரதேசங்களிலும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

✱ UNHCR, NRC, DRC மற்றும் UNDP ஆகிய அமைப்புகள் இணைந்து இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய மக்களுக்கான அத்தியாவசிய ஆவணங்களை பெற்றுக் கொடுக்கும் செயல் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன. வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வாழும் இந்தியாவில் இருந்து திரும்பியவர்கள் தமக்குரிய அத்தியாவசிய ஆவணங்களை பெற்றுக் கொள்ளவதற்கு இந்த ஏற்பாடு உதவியளித்துள்ளது. கொழும்பில் உள்ள அரசாங்க திணைக்களங்களின் துணையுடன் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

✱ வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களில் இதுவரை பதிவு செய்யாத 589 குடும்பங்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த இந்த மக்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்தமை காரணமாகவே உரிய முறையில் பதிவுகளை மேற்கொள்ள வில்லை என தெரியவந்துள்ளது.

பேசும் படம்



திருகோணமலை நகருக்கு வெளியே காணப்படுகின்ற சங்கமம் மாதிரி கிராமத்தின் பாடசாலை மாணவர்கள் விளையாடிக் கொண்டிருப்பதையே படத்தில் காண்கின்றீர்கள். இவ் முக்கிய பாலர் பாடசாலையானது முஸ்லிம், சிங்கள மற்றும் தமிழ் மாணவர்கள் ஒரே சுற்றாடலில் கல்வி பயில வழிசெய்கின்றது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு

தொ.பே: 0774952242

மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

திருகோணமலை நோக்கிய வித்தியாசமான இருபயணங்கள்

திருகோணமலை நகரமானது இலங்கையில் வாழும் மக்களின் போக்குவரத்திற்கான கேந்திரமாக மாரியுள்ளது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திருகோணமலைக்கு வருவதும் திருகோணமலையிலிருந்து வெளி இடங்களுக்கு செல்வதுமாக பல்வேறு விதமான மார்க்கங்களில் இடம்பெற்று வருகின்றது.

ஓமந்தை ஊடாக யாழ்பாணத்திற்கு செல்லும் பாதை தற்போது மூடப்பட்டு இருப்பதால் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமாக மக்கள் யாழ்பாணத்திற்கு சென்று வர கூடியதாக இருக்கின்றது.



கப்பல் மூலம் எவ்வாறு யாழ்பாணத்திற்கு செல்வது என்பது குறித்து அடிக்கடி சென்று திரும்பும் யாழ் பாணத்தை சொந்த இடமாகவும் தற்போது திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்தில் வசித்து வருபவர் மயில்வாகனன் ஸ்ரீகாந்தன்

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலமாக யாழ்பாணத்திற்கு போவதற்கு எவ்வகையான முன்னேற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என அவரிடம் கேட்டபோது தமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அடையாள அட்டையின் பிரதி ஒன்றை கொண்டு சென்றால் அங்குள்ள இராணுவத்தினர் அதனை உறுதிப்படுத்தி தருவார்கள் என்றும் அதனை கொண்டு தாங்கள் யாழ்பாணம் சென்று வர முடியும் என்றும் அவர் கூறினார்.

யாழ்பாணத்திலிருந்து திருகோணமலை வருவதாக இருந்தால் முதலில் தமது கிராம சேவையாளரிடம் சென்று நாங்கள் என்ன நோக்கத்திற்காக பயணம் செய்கின்றோம் என்பதை தெரிவிக்கும் கடிதம் ஒன்றை வழங்க வேண்டும்.

அதன் பின்னர் கிராமசேவகரால் வழங்கப்படும் விசேட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உதவி அரசாங்க அதிபரிடம் உறுதிப்படுத்திய பின்னர் யாழ் மாவட்ட இராணுவத்தரப்பிடம் அதனை கையளிக்க வேண்டும் என்றும் அவர்கள் அதனை உறுதிப்படுத்தி வழங்கிய பின்னர் பயணம் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்

இதேவேளை தென் பகுதியில் இருந்தும் மக்கள் பல்வேறு தேவைகளுக்கான திருகோணமலைக்கு வருகை தருகின்றனர்.

மாத்தறையை பிறப்பிடமாக கொண்ட விமலஸ்ரீ மீன்பிடி தொழிலை செய்பவர். இவர் தனது தொழிலுக்காக பேரூந்தின் மூலமாக தங்காலையிலிருந்து திருகோணமலைக்கு வந்து திரும்புகின்றார்.

விடுகாலைப் பொழுதில் தங்காலை யில் ஆரம்பிக்கும் இவரது பேருந்து பயணம் பிற்பகல் இரண்டு மணிக்கு திருகோணமலையை வந்தடைவதுடன் நிறைவு பெறுகின்றது.

தனக்கு பேரூந்து பயணம் மகிழ்வளிப்பதாக அவர் கூறினார்.தான் பயணிக்கும் பேரூந்தில் மூவின மக்களும் பயணிப்பதாகவும் தெற்கிற்கும் கிழக்கிற்குமாகன உறவுப் பாலமாக அந்த பேரூந்தை தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்

கிராமசேவகரால் வழங்கப்படும் விசேட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உதவி அரசாங்க அதிபரிடம் உறுதிப்படுத்திய பின்னர் யாழ் மாவட்ட இராணுவத்தரப்பிடம் அதனை கையளிக்க வேண்டும் என்றும் அவர்கள் அதனை உறுதிப்படுத்தி வழங்கிய பின்னர் பயணம் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்

வாழ்வின் வர்ணங்கள்

மன்னார் மாதரவை பெண்கள் ஒன்றியத்தில் கடந்த 4 வருடங்களாக ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிறுவன வேலைகளுக்கான திட்ட உத்தியோகத்தராக அந்தோணியம்மாக்ஸ் நாகபாதம் பணியாற்றி வருகின்றார்.

அதிகமான பெண்கள் ஆண்களுடைய உழைப்பிலே தங்கி வாழ்கின்றார்கள். மீன்பிடி தொழில் வேறு கைத்தொழில் இவ்வாறு ஆண்கள் தொழில் செய்யும் போது அவர்களுடைய வருமானத்தில் பெண்கள் தங்கி வாழ்கின்றார்கள்.



அப்படி தங்கி வாழும் போது அவர்கள் கூட அதிகாரத்தை பாவித்து பிரச்சினைகளை பற்றி கதைக்கும் போது பல பெண்கள் அடித்து துன் புறுத்தப் படுகிறார்கள்.

அவ்வாறு பாதிக்கப் படும் பெண்களின் பிரச்சினைகளை வெளி கொணர்ந்து அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்று தாங்கள் பெண்களை வலியுறுத்தி வருவதாக அவர் கூறுகின்றார்.

தமது தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலமாக தமது நிறுவனத்திற்கு வருகின்ற பெண்கள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாகவும் எந்த பிரச்சினை என்றாலும் தம்மிடம் வரும் பெண்கள் தமது பிரச்சினைகள் குறித்து எழுத்தில் தமக்கு அறியத் தருவதாகவும் அதற்குரிய தீர்வுகளை நாங்கள் மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

சாரம்

கிழக்கு மாகாணம் 14 வருடங்களுக்குப்பின் ஒருமாகாண சபைத் தேர்தலுக்கு முகம்கொடுக்கவுள்ளது. மே மாதம் 10 திகதி கிழக்கு மாகாணசபைத்தேர்தல் நடைபெற இருக்கின்றது. இந் நிலையில் மட்டக்களப்பு நகருக்கு அன்மையில் காணப்படும் எருமத்தீவு வாவிப்பகுதியில் வசிக்கும் சில நபர்களை சந்தித்து நடைபெற்று முடிந்த உள்ளுராட்சி மன்ற தேர்தல் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும், நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தல் பற்றியும் அவர்களிடம் வினாவிய போது அவர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பு.



மட்டக்களப்பு சாகிரா நலன்புரி நிலைய மக்கள்

நமது மாவட்டத்தை பொறுத்த வரைக்கும் இளைஞர்கள் ஒரு பிரச்சினையும் இல்லாம நடமாடக் கூடியதாக இருக்கின்றது. மற்றது என்னவென்றால் தொழில் வாய்ப்புகளுக்கு போய் வருவதற்கு எல்லாம் மீனவர்களுக்கு எல்லாம் மிகவும் வசதியான நிலையிலே இருக்கு. மற்றது பாடசாலைகளை பொறுத்த வரைக்கும் நிறுவனங்கள் வந்து ஒரு சில உதவிகள் செய்யுது. இப்ப கட்டிடங்கள் எல்லாம் கட்டி குடுத்தாலும் டீச்சர்மார் போக்குவரத்து வசதிகள் எல்லாம் கிராமபுரங்களில் செய்து குடுத்தால் அது மிகவும் பெரிய ஒரு உதவியாக இருக்கும். எல்லாரும் சமநிலையில் சந்தோஷமாக இப்ப இருக்கிற மாதிரி இனி வார தேர்தலும் நடந்து சம ரீதியாக நடக்கக் கூடிய மாதிரி இருந்தது என்றால் அது எங்களுக்கு மிகவும் நல்ல ஒரு விஷயம்.'

ஆரம்பத்தில் எல்லாரும் சொல்லுவார்கள் அப்படி பிறகு பார்த்தா பழைய குருடி கதவ திறடி என்ற மாதிரி தான் திருப்பியும் நடக்கும்.

மாற்றங்கள் என்று சொல்லி ஒன்றையும் காணவில்லை. ஒன்று மட்டும் என்ன என்று சொன்னால் இந்த காம்கள் எல்லாம் எடுத்து பொது மக்கள் நடமாடக்கூடிய மாதிரி கூடிய அளவிற்கு விட்டு இருக்கின்றார்கள். எந்த நேரத்திலும் தொழில் செய்யலாம். ஆற்று தொழில் செய்ற ஆட்கள் எங்கையும் போய் செய்யலாம். போக்குவரத்தை போய் செய்யலாம். அடுத்தது எல்லாத்துக்கும் வசதி. சாமான்கள் அடிக்கடி விலை யேறிக் கொண்டு இருக்கு. அது தான் இப்ப மாற்றம். அந்த மாற்றத்தைதான் சொல்லலாம்.

மாற்றம் என்னவென்றால் அது தான் மாற்றம்.

மட்டக்களப்பில் நோர்வே அகதிகள் பேரவையின் மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பான கால அட்டவணை

நோர்வே அகதிகள் பேரவை மட்டக்களப்பில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. எந்தெந்த பிரதேசங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது தொடர்பான நேர அட்டவனையை கீழே காணலாம்.

பிரதேச செயலாளர் பிரிவு	நலன்புரி நிலையம்	விநியோக மையம்	திகதி	நேரம்
களுவாஞ்சிக்குடி	குருக்கள் மடம்	கலைவாணி மகா வித்தியாலயம்	05.12.2008	10.00-11.00
ஆரையம்பதி	கோவிற்குளம்-உறவினர் குடும்பம்	கோவிற்குளம் NRC நிலையம்	05.12.2008	12.15-13.30
	மான்பவர்	மான்பவர் நிலையம்	05.12.2008	14.00-16.00
மண்முனை வடக்கு	பாலைமீன்மடு 1	பாலைமீன்மடு NRC நிலையம்	13.05.2008	10.00-12.00
	பாலைமீன்மடு 2	பாலைமீன்மடு NRC நிலையம்	13.05.2008	12.00-13.30
	திருத்தந்தை நிலம்	திருத்தந்தை நிலம்	13.05.2008	13.30.14.00
	மண்முனை வடக்கு	மாணிக்க பிள்ளையார் கோவில்	13.05.2008	15.00-16.30
	சி-ம-வி உறவினர் குடும்பம்	சிங்கள மகா வித்தியாலயம்	13.05.2008	17.00-18.00
	கொக்குவில் 3	கொக்குவில் 3	14.05.2008	10.00-11.00
	கொக்குவில் 1	கொக்குவில் 3	14.05.2008	11.00-12.00
	சின்ன ஊரணி IOMநிலையம்	கொக்குவில் 3	14.05.2008	12.00-12.45
	சின்னஊரணி உறவினர் குடும்பம்	கொக்குவில் 3	14.05.2008	12.45-13.30
	நாவற்கேணி NRC நிலையம்	கொக்குவில் 3	14.05.2008	14.15-15.00
	சத்துருக்கொண்டான் 1	கொக்குவில் 3	14.05.2008	15.00-15.30
	சத்துருக்கொண்டான் 2	கொக்குவில் 3	14.05.2008	15.30-16.45
	சாஹிரா IOM நிலையம்	களஞ்சியசாலை	15.05.2008	10.00-11.30
	கள்ளியங்காடு	களஞ்சியசாலை	15.05.2008	11.30-13.00
செங்கலடி	சவுக்கடி	சவுக்கடி NRC நிலையம்	15.05.2008	14.00-15.45
	பலாச்சோலை UNOPS நிலையம்	பலாச்சோலை UNOPS நிலையம்	16.05.2008	10.00-12.30
	களுவன்கேணி	களுவன்கேணி NRC நிலையம்	16.05.2008	13.30.-15.15
	செங்கலடி உறவினர் குடும்பம்	சித்தாண்டி கிராம சேவகர் அலுவலகம்	20.05.2008	10.30.14.30
கிரான்	கிரான் உறவினர் குடும்பம்	கிராமசேவகர் அலுவலகம்	21.05.2008	10.30-16.00
	கிரான் உறவினர் குடும்பம்	கிராமசேவகர் அலுவலகம்	22.05.2008	10.30-16.00
வாழைச்சேனை	விநாயகபுரம் முகாம்	விநாயக புரம் முகாம்	23.05.2008	10.30-11.00
	வாழைச்சேனை உறவினர் குடும்பம்	கிராமசேவகர் அலுவலகம்	23.05.2008	11.00-12.00
கிரான்	கோரவெலிமடு உறவினர் குடும்பம்	கிரிமுட்டி ICRC நிலையம்	23.05.2008	12.30-13.30
	கிரிமுட்டி ICRC நிலையம்	கிரிமுட்டி ICRC நிலையம்	23.05.2008	13.30-14.30
	மாவடி வேம்பு	மாவடி வேம்பு ICRC நிலையம்	23.05.2008	15.30-17.00

நோர்வே அகதிகள் பேரவையின் மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு
பிரதாப் 0773833511 பிரசாத் 0773770964 றிஸ்மி 0773833510 லசாந்தன் 0773476232 மொகைமின் 0773833512

பொது மக்களுக்கான அறிவித்தல்

கிழக்கு மாகாணத்தில் வாழும் 17 வயதிற்கும் 29வயதிற்கும் இடைப்பட்ட பெண்ணா நீங்கள் ? உங்கள் குடும்ப வருமானம் 3500 ரூபாவை விடவும் குறைவானதா ? நீங்கள் ஆதரவற்றவரா ? இல்லை அங்கவீனமுற்றவரா ? உங்கள் வாழ்வை வளமாக்க தொழிற் பயிற்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

கட்டுமானம், தொழில் நுட்பம் ,இயந்திரவியல் துறையில் உங்களுக்கான தேசிய அங்கீகாரம் பெற்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன

உங்கள் வருமானத்தை அதிகரிக்கவும் புதிய தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கவும் நீங்கள் விரும்பினால் உங்கள் பிரதேச செயலகத்துடன் அல்லது பின்வரும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மட்டக்களப்பு-உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்
இலக்கம் 84, பார் வீதி
மட்டக்களப்பு
தொலைபேசி : 065 222 6972

அம்பாறை - பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்
இராமகிருஷ்ண வீதி
அக்கரைப்பற்று- 08
தொலைபேசி : 067 2278237

திருகோணமலை -சர்வோதயம்
3ஆவது மைல்கல் உடப்பு
தொலைபேசி : 026 222 0083

இந்த செயற்றிட்டமானது கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகள் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக்கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்றிறனுடன் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப்ப மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமுல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

4. **மனித கௌரவத்தை மதித்தல்:** சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகிறோம். நாங்கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கின்றோம்.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட வலுவான ஆவணமோ அல்ல.

Embassy of the Federal Republic of Germany Colombo
Embassy of Switzerland
JAPAN Embassy of Japan
The Netherlands Embassy
British High Commission
Embassy of Sweden
European Commission
Australian Government AusAID
United Nations
NORWEGIAN EMBASSY
MOFAT
Canadian High Commission / Haut-commissariat du Canada
The United States Embassy

நோர்வே அகதிகள் பேரவையினால் மண்ணெண்ணெய் விநியோகம்

நோர்வே அகதிகள் பேரவை மட்டக்களப்பில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்தும் இந்தத் திட்டம் குறித்தும் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளும் நோக்கில் **நோர்வே அகதிகள் பேரவையின் சமூக ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் பிரசாத்**தை நேர்கண்டோம்.

இங்குள்ள மக்களுக்கு மண்ணெண்ணை கொடுக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதுவாய் மைந்த காரணங்கள் எவை?

இங்கு மொத்தமாக பதினெட்டு அகதி முகாம்கள் இருக்கின்றன. அதில் 9 அகதி முகாம்கள் எங்களுடைய பார்வையில் இருக்கின்றன. அவற்றில் 7 எங்களுடைய முழு பொறுப்பில் இருக்கின்றன. நாங்கள் தனிநபர் செயற்பாடு களை செய்து வருகிறோம். அதன் மூலம் பிரதானமாக கண்டறிந்த பிரச்சினை மண்ணெண்ணெய் அடுப்புகள் இருக்கின்றன ஆனால் அதற்குறிய மண்ணெண்ணெய் இல்லை அதனால் அந்த அடுப்பை பயன்படுத்த முடியாமல் மக்கள் இருக்கின்றார்கள். எனவே மண்ணெண்ணெய்தான் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டாலும் அவற்றுக்கான உதவிகளை ஏனைய நிறுவனங் கள் வழங்குகின்றன. அதனால் ஏனைய நிறுவனங்கள் செய்யா தவறை நாங்கள் செய்ய வேண்டுமென நினைத்தோம் முகாம்களுக்கு பொறுப்பான குழுக்களும் இந்த பிரச்சினையைதான் முன் கொண்டு வந்தார்கள். மற்றது மக்கள் விறகுகளை பெற்றுக் கொள்வதிலும் சிரமப்படுகின்றார்கள் அதனால் மண்ணெண்ணெய் கொடுத்தால் மக்களுக்கு இலகுவாக இருக்குமென்று கருதினோம். பிறகு எங்களுடைய தலைமையகத்தில் கதைத்தோம் அவர்கள் அதற்கான அனுமதியை தந்தார்கள். அதனால் இந்த வேலைத்திட்டத்தை பிரதானமாக முன்னெடுத்து செல்கிறோம்.

இந்த காலப்பகுதியில் மண்ணெண்ணெய் இந்த பகுதி மக்களுக்கு ஏன் அவசியமாக கருதப்படுகிறது?

மக்களுக்கு விறகு தேவைப்படுவதால் அவர்கள் காட்டுக்கு செல்லவேண்டி இருக்கின்றது. அப்படி செல்லும் போது சில பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இதுமட்டுமல்லாமல் மழையும் பிரச்சினையாக காணப்படுகிறது. மொத்தத்தில் விறகு பெற்றுக்கொள்வது பெரும் கஷ்டமாகவே உள்ளது. அதனால் மண்ணெண்ணையை நாங்கள் நேரடியாக வழங்குவதன் மூலம் அவர்களின் எல்லா தேவைகளும் பராமரிக்கப்படுகின்றன என நாங்கள் கருதுகின்றோம்.



பிரபாகரன் பிரசாத்

பிரதானமாக கண்டறிந்த பிரச்சினை மண்ணெண்ணெய் அடுப்புகள் இருக்கின்றன ஆனால் அதற்குறிய மண்ணெண்ணெய் இல்லை அதனால் அந்த அடுப்பை பயன்படுத்த முடியாமல் மக்கள் இருக்கின்றார்கள்.

இந்த மண்ணெண்ணெய் மக்களுக்கு எந்தளவில் பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருக்கின்றது?

நாங்கள் மாதத்திற்கு ஒரு முறை ஒரு குடும்பத்திற்கு 4லீற்றர் என்ற அடிப்படையில் வழங்கி வருகிறோம். இவ்வாறு வழங்குவதற்கு திட்டமிட்டத்திற்கு முக்கிய காரணம் இதற்கு முன்னர் வழங்கிய நிறுவனங்கள் 4லீற்றர் அடிப்படையிலேயே வழங்கியிருக்கின்றனர். அதற்கு மேலதிகமாக நாங்கள் வழங்க விரும்பவில்லை. ஏனென்றால் மக்கள் அதற்கு பழக்கப்பட்டுள்ளார்கள். இதேவேளை முக்கியமாக நாங்கள் நிரந்தர வதிவிடவியலாளர்களையும் இதில் உள்ளடக்கியுள்ளோம். 3 பிரிவுகளில் 4864 குடும்பங்கள் அடங்குகின்றன. இதற்கு 19456 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. இதேவேளை, அடுத்த மாதத்திலிருந்து இதற்கு அதிகமாக தேவைப்படும் ஏனென்றால், கிரான் பிரதேச செயலாளர் பிரிவை இதுவரை சேர்க்கவில்லை இதற்கு காரணம் நிரந்தர வதிவிடவியலாளர்களின் தரவுகள் எங்களுக்கு இன்னும் சரியாக கிடைக்கப்பெறவில்லை. அடுத்த மாதத்திலிருந்து இந்த பகுதிக்கும் வழங்க திட்டமிட்டுள்ளோம்.


இந்த வேலைத்திட்டத்தை ஏனைய அரசசார்ந்த அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செய்யக் கூடியதாக இருக்கின்றதா?

SLRC அவர்களுடைய பௌவர்களை வழங்குகின்றார்கள். அந்த பௌவர்க்குறிய செலவினங்களை IOM நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. எனவே நாங்களும்SLRC மற்றும் IOM ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்தே இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு அமைந்த 'உணர்வுகள்' குறுநாடகத்தின் தொகுப்பு.

திருப்பம்



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் வாரா வாரம் உங்கள் கதைகள் என்ற குறுநாடகப் பகுதி இடம்பெற்று வருகின்றமை அனை வரும் அறிந்த விடயமே. இந்த வாரம் பெண்களின் உரிமைகளை மையப்படுத்தி திருப்பம் என்ற குறு நாடகம் ஒலிபரப்பாகியது.

பெண்கள் பாலியல் ரீதியாக பல விதமான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிறார்கள். வீட்டில் ஆரம்பித்து வேலைத்தளங்கள் வரைக்கும் இந்த நிலைமை காணப்படுகிறது. இந்தக் கதையின் நாயகன் அன்ரு மன நிலை சரியில்லாத மனைவியுடன் வாழமுடியாது என்று கூறி, மனைவியின் தங்கை விஜியை தன்னை கல்யாணம் செய்து கொள்ளும் படி வற்புறுத்துகிறான். தனது அக்காவின் நிலைமையை நினைத்து வேதனைப்படும் விஜிக்கு அன்ருவின் செயற்பாடுகள் வேதனையையும், ஆத்திரத்தையும் ஊட்டுகிறது. எத்தனை தடவை கூறியும் செவிமடுக்காத அன்ருவிடம் தனது முழு எதிர்ப்பையும் வெளிப்படுத்துகிறாள்.

வேறு ஆதரவு இல்லாத விஜி, தன்னுடைய நண்பி நிர்மலாவிடம் அனைத்தையும் கூறுகிறாள். நிர்மலா பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விஜியிடம் கூறி, ஆறுதல் கூறுகிறாள்.

இரவு நேரத்தில் அன்ரு போதையில் வந்து உளறுகிறார். அக்காவின் கணவரை தங்கை மணம் முடிப்பதில் தவறு இல்லை என்று கூறுகிறார். விஜி கோபத்துடன் உனக்கு பைத்தியமா என்று கேட்டு பேசுகிறாள். பதிலுக்கு அன்ரு உன்னில எனக்கு பைத்தியம் தான், நான் சொல்வதற்கு நீ சம்மதிக்க வேண்டும் என்று கூறுகிறான். விஜி இதற்கு மேலும் தன்னால் பொறுமையாக இருக்க முடியாது என்று கூறுகிறாள். உடனே அன்ரு கோபத்துடன் நீ போட்டச்சி உன்னால் என்னை ஒன்றும் செய்ய முடியாது, நான் நினைத்திருந்தால் உன்னை எப்படியோ அசிங்கப்படுத்தி இருப்பேன் என்று கூறுகிறான்

விஜி நிர்மலாவிடம் கூறி அழுகிறாள். நிர்மலா பெண்களுக்கு காலாகாலமாக நிகழ்ந்து வரும் அத்துமீறல்கள் பற்றி விபரிக்கிறாள். ஆண் என்ற அதிகாரத்தினால் பலியாகும் பெண்களைப் பற்றி கூறுகிறாள். பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றியும், இந்தப்பிரச்சினைகளுக்கு எதிராக பல சட்டங்கள் இருந்தும், அவை முழு அதிகாரத்துடன் செயற்படுவதில்லை, அதற்கு காரணம் பெண்கள் தங்களது பிரச்சினைகளை வெளியில் சொல்ல தயங்குகின்றமையே என்றும் கூறுகிறாள். விஜியும் அதை ஏற்றுக் கொள்கிறாள். பெண்களின் ஆசைகள், சுதந்திரங்கள், எதிர்பார்ப்புகள், உரிமைகள் மற்றவர்களால் சுரண்டப்படுற நேரத்தில், நிச்சயமாக பெண்கள் தங்களது எதிர்புகளை காட்ட வேண்டும். இல்லாவிட்டால் பெண்கள் காமப் பொருளாகவும், அடிமைகளாகவும் தான் இருக்க வேண்டும் என்று நிர்மலா கூறுகிறாள்.

பதிலுக்கு விஜி இது சாத்தியப்படுமா என்று வினாவுகிறாள். உடனே நிர்மலா, நீ இப்படியே இருந்தால் உனது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாமல் போய்விடும், அதனால் உன்னுடைய அக்காவையும் அழைத்துக் கொண்டு வேறு எங்காவது சென்று, நிம்மதியாக வாழ முயற்சி செய். யோசித்து செயற்படு என்று அறிவுரை கூறுகிறாள்.

திருப்பம் குறு நாடகம் அவ்வாறாக அமைந்தது. ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு விடயங்களை மையமாகக் கொண்டு குறு நாடகங்கள் ஒலிபரப்பாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது
INTERNEWS
USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.